சுருக்கம்

நல வாரியம்– தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம்– ஏற்கனவே செயல்பட்டு வந்த வாரியத்தின் நிதி ஆதாரம் செலவினம் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் தளவாட பொருட்களை புதிய திட்டத்தின் கீழ் பயன்படுத்திக் கொள்ளுதல் மற்றும் புதிய திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளிகள் மற்றும் வழங்கப்பட்ட உதவித் தொகைகள் ஆகியவற்றை கிராம சபை கூட்டத்தில் வைத்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

வருவாய்த் (நி.சீ.1(2)துறை

அரசு ஆணை (நிலை) எண். 592 நாள் 8.9.2006

மீண்டும் படிக்கவும்

1) அரசாணை (நிலை) எண்.600, வருவாய்த்துறை, நாள் 27.11.2000
2) அரசாணை (நிலை) எண்.62, வருவாய்த்துறை, நாள் 9.2.2001
3) அரசாணை (நிலை) எண்.540, வருவாய்த்துறை, நாள் 19.9.2005
4) அரசாணை (நிலை) எண்.547, வருவாய்த்துறை, நாள் 22.9.2005
5) அரசாணை (நிலை) எண்.554, வருவாய்த்துறை, நாள் 30.9.2005
6) அரசாணை (நிலை) எண்.641, வருவாய்த்துறை, நாள் 22.11.2005

படிக்கவும்

7) நிலச்சீர்ருத்த ஆணையரின் கடிதம் எண்.எச்1/13608/2005 (நி.சீர்.)நாள் 27.1.2006.
8) அரசாணை (நிலை) எண்.509, வருவாய்த்துறை, நாள் 7.8.2006

.........

ஆணை:-

பதிமூன்றாவது சட்டமன்ற கூட்டத் தொடரில் மேதகு ஆளுநர் அவர்களின் அறிவிப்பின்படி பார்வை 8–இல் படிக்கப்பட்ட அரசாணையில் ஏற்கனவே செயல்பட்டு வந்த தமிழக முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்கு பதிலாக தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. பார்வை 7–இல் படிக்கப்பட்ட கடிதத்தில் நிலச்சீர்திருத்த ஆணையர், ஆணை வேண்டி பின்வரும் கோரிக்கைகளை பரிந்துரைத்துள்ளார்:-

1) பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி ஏற்கனவே செயல்பட்டு வந்த தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் பங்களிப்பாக பெறப்பட்டு இந்தியன் வங்கி மற்றும் தமிழ்நாடு அரசு சார்ந்த நிதிநிறுவனங்களில் முதலீடு செய்து 31.7.2006 அன்று சேமிப்பு கணக்கில் உள்ள ரூ.10,37,93,524 சேமிப்பு நிதியிலிருந்து பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்புத் திட்டம் 2001–இன் கீழ் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக அச்சடிக்கப்பட்ட பதிவேடுகள் மற்றும் படிவங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய ரூ.33,74,800–யை செலவழிக்க அனுமதி.

2) பார்வை நான்கில் படிக்கப்பட்ட அரசாணையின்படி தமிழக முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்த தோற்றுவிக்கப்பட்ட புதிய பணியிடங்களை தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய திட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ள அனுமதி.

3) பார்வை ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் நிலச்சீர்திருத்த ஆணையர் அலுவலகத்திற்கு கணினி உள்ளிட்ட வழங்கப்பட்ட தளவாட சாமான்களை தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ள அனுமதி.

3. மேலே பத்தி இரண்டில் உள்ள நிலச்சீர்திருத்த ஆணையரின் கோரிக்கையை ஆழ்ந்து பரிசீலனை செய்தும் மேலும் இத்திட்டத்தினை செயல்படுத்திட தேவையான பிறவற்றின் மீதும் கீழ்க்கண்ட ஆணைகளை அரசு வெளியிடுகின்றது.

(அ) தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்புத் திட்டம் **2001–**இன் கீழ் உறுப்பினர்களை பதிவு செய்யவும் நலத்திட்ட உதவிகளை வழங்கவும் மாவட்ட ஆட்சியர்களால் தேவையான பதிவேடுகள் மற்றும் படிவங்கள் அச்சடிக்கப்பட்டதற்கான செலவினம் ரூ.**33,74,800/–** யை ஏற்கனவே இருந்த தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தின் சேமிப்பு கணக்கில் உள்ள ரூ.**10,37,93,564/–** நிதியிலிருந்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்க நிலச்சீர்திருத்த ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

(ஆ) ஏற்கனவே செயல்பட்டு வந்த தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்புத் திட்டம் **2001–**இன் கீழ், வேலை தருவோரின் பங்களிப்பு மற்றும் உறுப்பினர்களின் பங்களிப்பு ஆகியவற்றின் மூலம் பெறப்பட்ட தொகை, அரசின் ஒப்புதலோடு, இந்தியன் வங்கி, தமிழ்நாடு அரசு சார்ந்த நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சேமிப்பு நிதியிலிருந்து, ஏற்கனவே வாரியத்தால் மேலே பத்தி **3(**அ**)** –இல் குறிப்பிட்டுள்ளபடி அளிக்கப்பட வேண்டிய செலவினத்தை வழங்கிய பின்னர், மீதித் தொகையை " தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நிதியம்" என்ற ஒரு நிதியத்தை ஏற்படுத்தி அதில் சேமிக்கலாம். அமைக்கப்படவுள்ள வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களின் பயணச் செலவு மற்றும் இதர செலவினங்களை மேற்படி நிதியிலிருந்து வழங்க அனுமதி வழங்கப்படுகின்றது.

(இ) பார்வை நான்கில் படிக்கப்பட்ட அரசாணையின்படி தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களை இப்புதிய திட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ள நிலச்சீர்திருத்த ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

(ஈ) பார்வை ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அனுமதிக்கப்பட்ட கணினி உள்ளிட்ட தளவாட சாமான்களை இப்புதிய திட்டத்திற்கு தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ள நிலச்சீர்திருத்த ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

(உ) ஏற்கனவே கலைக்கப்பட்ட வேளாண்மை வருமான வரித்துறையில் உள்ள உதவிக் கணக்கு அலுவலர் பணியிடத்தை கணக்கு அலுவலர் பணியிடமாக நிலை உயர்த்தி புதிய திட்டத்தின் கீழ் நிலச்சீர்திருத்த ஆணையர் அலுவலகத்தில் கணக்குகளை பராமரிக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

Verified RealEstate™

(ஊ) தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டத்தின் கீழ் கிராமப்புற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் பயனுறவுள்ளதால், கிராம மக்கள் அனைவரும் இத்திட்டத்தின் மூலம் அரசு வழங்குகின்ற பல்வேறு நலத்திட்டங்களை அறிந்து கொள்கின்ற வகையில் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்ற பயனாளிகள் மற்றும் வழங்கப்பட்ட உதவிகள் பற்றிய விவரங்களை ஊராட்சி மன்றங்களில் நடைபெறுகின்ற கிராம சபைக் கூட்டத்தில் வைக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. மேலே பத்தி 3–இல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின்படி, தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு அறிக்கை ஒன்றினை அரசுக்கு அளிக்குமாறு நிலச்சீர்திருத்த ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 311/SS/Rev/06-1, நாள் 8.9.2006 ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது,

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். ஆதிசேஷயா,
அரசு செயலாளர்.

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம்,சென்னை 600 005
சிறப்பு ஆணையர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர், சென்னை 600 005
நிலச்சீர்திருத்த ஆணையர், சென்னை 600 005
அனைத்து மாவட்டாட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து வட்டாட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
மாநில கணக்காயர், சென்னை–600 018 (பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை–600 035 (பெயரில்)
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள் (வடக்கு)(தெற்கு)(கிழக்கு)சென்னை,
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.
நகல்– முதலமைச்சரின் செயலர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
வருவாய்த்துறை அமைச்சரின் முதுநிலை உதவியாளர், சென்னை–9.
அனைத்து தலைமைச் செயலக துறைகள், சென்னை–600 009,
பொதுத் (சிறப்பு.அ)துறை, சென்னை–600 009
பொதுத் (கமுக்கம்)துறை, சென்னை–600 009
நிதித் (வ.செ/வருவாய்)துறை, சென்னை–09
இகோ/ உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

Verified @ RealEstate™